நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் துறையில் ஆய்வு மேற்கொள்ளும் தனியாருக்கு மானியம்: அறிவியல், தொழில்நுட்பத்துறை செயலர் டி.ராமசாமி**

First Published : 05 Jul 2011 03:30:56 AM IST



சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் திங்கள்கிழமை நடைபெற்ற கமல்நயன் பஜாஜ் ஆராய்ச்சி மையத்தின் திறப்பு விழாவில் மத்திய அறிவியல், தொழில்நுட்பத் து

சென்னை, ஜூலை 4: வேளாண்மை, நீர், சுற்றுச்சூழல், சுகாதாரம் ஆகிய துறைகளில் சிறந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் தனியாருக்கு மானியம் வழங்கப்படும் என அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயலர் டி.ராமசாமி கூறினார்.

சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள ஆராய்ச்சி மையத்துக்கு கமல் நயன் பஜாஜ் ஆராய்ச்சி மையம் என்று பெயரிடும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட டி.ராமசாமி பேசியது: சுகாதாரத் துறையில் அதிகமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எம்.பி.பி.எஸ். படித்து முடித்து விட்டு ஆராய்ச்சி படிப்புகளில் இதுவரை 250 பேர் தங்கள் பெயரை பதிவு செய்து கொண்டுள்ளனர். எம்.பி.பி.எஸ். படித்து முடித்துவிட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோருக்கான மானியத்தை ரூ. 8 ஆயிரத்தில் இருந்து ரூ. 16 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

ஆனால் இப்போது மானியத்தை ரூ. 50 ஆயிரமாக உயர்த்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். சுகாதாரத் துறையில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்துவதற்காக இது போன்று முயற்சிகள் நடைபெறுகின்றன. மேலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளுக்கும் மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 10-15 வயது பள்ளி மாணவர்கள் மேற்கொள்ளும் அறிவியல் ஆய்வு திட்டங்களில் சிறந்த திட்டத்துக்கு

ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 10 லட்சம் பள்ளி மாணவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன என்றார் அவர். சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத், தேசிய உற்பத்தி திறன் குழுவின் தலைவர் வி.கிருஷ்ணமூர்த்தி, விஷன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் எச்.என். மாதவன், பஜாஜ் குழுமத்தின் தலைவர் ராகுல் பஜாஜ் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**காளான் வளர்க்க இலவசப் பயிற்சி**

First Published : 04 Jul 2011 02:12:32 PM IST

காரியாபட்டி, ஜூலை 3: மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன், வேளாண் தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கி வரும் விருதுநகர் வி.எஸ்.வி.என். பாலிடெக்னிக் கல்லூரி, கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து, ஒ.கோவில்பட்டியில் இலவச காளான் வளர்ப்புப் பயிற்சி அளித்தன.

மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத் தொழில் நுட்ப வல்லுனர்கள் ராஜேந்திரன், டாக்டர் ஜெகதீஸ்வரி பயிற்சி அளித்தனர்.

விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் கல்லூரிச் செயலாளர் சண்முக மூர்த்தி, ஊராட்சித் தலைவர் ராமசாமி, சமுதாய முன்னேற்றத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காளான் வளர்ப்பு மற்றும் மண்வள பாதுகாப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. 30 பெண்கள் பயிற்சி பெற்றனர்.

இலவசப் பயிற்சி பெற விரும்புவோர், கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஏற்பாடுகளை திட்ட உதவியாளர் கவிதா செய்திருந்தார்.

**வாழை நார் பிரித்தெடுத்தல் பயிற்சி முகாம்**

First Published : 04 Jul 2011 12:43:18 PM IST

காஞ்சிபுரம், ஜூலை 3: காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூர் கிராமத்தில் இப்கோ உர நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் மற்றும் ஆத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் இணைந்து நடத்திய வாழைநார் பிரித்தெடுத்தல் தொடர்பான பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு இப்கோ சஞ்சார் நிறுவன மாநில விற்பனை மேலாளர் அ.ஜின்னா தலைமை தாங்கினார். இந் நிறுவனத்தின் இயக்குநர் மணீஷ்குப்தா பங்கேற்று வாழைநார் பிரித்தெடுத்தல் தொடர்பான பயிற்சி முகாமை தொடங்கி வைத்தார்.

வாழை ஆராய்சி மைய இயக்குநர் ஸ்ரீதர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழை மட்டையில் இருந்து நார் பிரித்தெடுப்பது தொடர்பாக தான் கண்டறிந்த இயந்திரம் மூலம் பயிற்சி அளித்தார்.

இந் நிகழ்ச்சியில் துணைப் பதிவாளர் என்.இளங்கோ, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் கு.சேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மழை இன்றி பேரிக்காய் விளைச்சல் குறைவு ம.ஆ. ஆரோக்கியசுவாமி**

First Published : 04 Jul 2011 02:00:31 PM IST

கொடைக்கானல், ஜூலை 3: கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால் பேரிக்காய் விளைச்சல் குறைந்தது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

கொடைக்கானல் பகுதிகளான வில்பட்டி, பள்ளங்கி, கோம்பை, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, கோவில்பட்டி, அப்சர்வேட்டரி, வட்டக்கானல், செண்பகனூர், சகாயபுரம், பிரகாசபுரம், அட்டக்கடி, கோராப்பூர், இருதயபுரம், சின்னப்பள்ளம், பெரும்பள்ளம், நாயுடுபுரம் போன்ற கிராமங்களில், அதிக அளவில் பேரிக்காய் மரங்கள் வளர்கின்றன.

இந்தப் பகுதிகளில் இருந்து கிடைக்கக்கூடிய பேரிக்காய்கள் மதுரை, திண்டுக்கல்,திருச்சி, சென்னை, கேரளம், தேனி ஆகிய இடங்களுக்கு அதிக அளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

கொடைக்கானலில் பொதுவாக ஜூன் மாதம் பருவமழை பெய்யும். ஆனால், இந்தாண்டு பருவமழை பொய்த்ததால் பேரிக்காய் விளைச்சல் குறைந்து  காணப்படுகிறது.

கொடைக்கானலில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய 5 மாதங்களில் பேரிக்காய்கள் எடுக்கப்பட்டு வெளி இடங்களுக்கு அனுப்பப்படும்.

இங்கு விளையும் பேரிக்காய்களை எடுப்பதற்கு திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, வத்தலகுண்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் கொடைக்கானலில்

4 மாதங்கள் தங்கி பேரிக்காய் எடுத்து வருவர். இவர்களுக்கு, நாள் ஒன்றுக்கு கூலியாக பெண்களுக்கு ரூ.250, ஆண்களுக்கு ரூ.300 வழங்கப்படுகிறது.

இதுகுறித்து பெருமாள்மலையைச் சேர்ந்த விவசாயி கண்ணன் கூறியது: நான் 20 ஆண்டாக பேரிக்காய் விவசாயம் செய்து வருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பேரிக்காய் விளைச்சல் குறைந்து கொண்டே வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் கொடைக்கானலிலிருந்து ஒரு நாளைக்கு 10 முதல் 15 லாரிகளில் பேரிக்காய் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படும். குறிப்பாக சென்னை, கேரளம் போன்ற இடங்களுக்கு அதிக அளவில் கொண்டு செல்லப்படும்.

ஜூன் முதல் அக்டோபர் வரை பேரிக்காய் எடுக்கப்படும் பல்வேறு இடங்களிலிருந்து கூலியாட்கள், கொடைக்கானலில் தங்கி பேரிக்காய் எடுப்பது வழக்கம்.

அந்த அளவிற்கு கொடைக்கானலில் பேரிக்காய் விளைச்சல் அதிக அளவில் இருக்கும். ஆனால், தற்போது ஒரு நாளைக்கு 5 லாரிகளில் பேரிக்காய் கொண்டு செல்வது கூட இல்லை.

இதற்கு காரணம் கொடைக்கானலில் நாளுக்கு நாள் விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்பட்டு அவற்றில் காட்டேஜ்கள், விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

இதனால் பேரிக்காய் மரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் அடுத்த 5 ஆண்டுக்குள் கொடைக்கானலில் பேரிக்காய் மரங்களே இல்லாத சூழ்நிலை உருவாகும்.

தோட்டக்கலைத் துறையினர் நடவடிக்கை எடுத்து பேரிக்காய் மரங்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**முட்டை விலை**

First Published : 04 Jul 2011 11:01:16 AM IST

நாமக்கல், ஜூலை 3: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.68, சென்னையில் ரூ. 2.74.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்

முதல் விலை கிலோ ரூ. 48, முட்டைக் கோழி கிலோ ரூ. 40.

**காரியாபட்டி பகுதியில் மக்காச் சோள சாகுபடி**

First Published : 04 Jul 2011 02:10:43 PM IST

காரியாபட்டி, ஜூலை 3: விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி சுற்று வட்டாரப் பகுதிகளில் கோடை கால மக்காச் சோள சாகுபடி தொடங்கியுள்ளது.

காரியாபட்டியைச் சுற்றியுள்ள வரலொட்டி, அழகியநல்லூர், புதுப்பட்டி, ஜோகில்பட்டி, புளியம்பட்டி, பிசிண்டி, பாம்பாட்டி, ஆவியூர், அரசகுளம் மற்றும் பல பகுதிகளில் மக்காச் சோளம் பயிரிடப்படுகிறது.

கோடை காலக் கிணற்றுப் பாசனம் மற்றும் கண்மாய்ப் பாசனம் மூலம், 800 ஏக்கரில் மக்காச் சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு துல்லிய நுண்ணிய பாசனத் திட்டத்தின் கீழ்,

பெரும்பாலான விவசாயிகள் அரசு அளித்த 65 சதவீத மானியத்துடன், சொட்டு நீர்ப் பாசன விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

காரியாபட்டி பகுதிகளில், மழை சரிவரப் பெய்யாவிட்டாலும், இத் திட்டத்தின் கீழ் கோடை கால மக்காச் சோளம் பயிரிடப்பட்டிருந்தது. மக்காச் சோளம் நன்கு விளைந்து தற்போது அறுவடை துவங்கியுள்ளது.

இந்தாண்டு குவிண்டால் ரூ. 1,200 முதல் ரூ. 1,300 வரை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில், அரசே மக்காச் சோளம் கொள்முதல் நிலையம் அமைத்து நல்ல விலைக்கு வாங்கி கொள்வதால், விவசாயிகள் நல்ல லாபம் அடைகின்றனர்.

தமிழகத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் இருப்பது போல், மக்காச் சோளம் கொள்முதல் நிலையம் அமைத்தால், இடைத்தரகர்கள் மூலம் விலை சரிவு ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

எனவே, இப் பகுதியில் மக்காச்சோளம் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

First Published : 04 Jul 2011 02:07:10 PM IST

காரியாபட்டி, ஜூலை 3: திருச்சுழி அருகே ம.ரெட்டியபட்டியில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் நடைபெற்றது.ம.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் வரவேற்றார். மண்டல ஆராய்ச்சி நிலையம் செல்லையா துவக்க உரையாற்றினார். முனைவர் ராஜேந்திரன் நெல், கம்பு, சோளம், எண்ணெய் வித்துப் பயிர்களில் பூச்சி, நோய் தாக்குதல் அறிகுறி மற்றும் தடுப்பு முறைகளை எடுத்துரைத்தார்.உதவிப் பேராசிரியர் அருணகிரிதாரி வேளாண் விளை பொருள்களின் மதிப்புக் கூட்டல் பற்றி பேசினார். கால்நடை பராமரிப்பு முறை குறித்து டாக்டர் ரமேஷ் விளக்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் வளர்மதி, துணை வேளாண்மை அலுவலர் வேல்சாமி செய்திருந்தனர்.

**சொட்டுநீர் பாசனத்துக்கு 100 சத மானியம் அளித்தால் விவசாய உற்பத்தி பெருகும்**

First Published : 04 Jul 2011 01:28:12 PM IST

ஈரோடு, ஜூலை 3: சொட்டுநீர் பாசனத்துக்கு 100 சத மானியம் அளிக்க அரசு முன்வரும் பட்சத்தில் விவசாய உற்பத்தி அதிகரிக்கும் என விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சொட்டு நீர்ப்பாசனத்துக்கு அளிக்கப்படும் மானியத்தை, 100 சதமாக அதிகரிக்க முதல்வர் முடிவெடுத்துள்ளார். இதனால், விவசாயிகளுக்கு உரச்செலவு குறைவதுடன், 30 சதவீதம் தண்ணீர் சேமிக்கவும், மகசூல், 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்தது:

திருந்திய நெல் சாகுபடி முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவும், சொட்டு நீர்ப் பாசனத்துக்கு, 100 சத மானியம் அளிக்கவும் முதல்வர் முடிவு செய்துள்ளதாகவும், அது தொடர்பான தகவல்களை கேட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் என்ற பெயரில் செயல்பட்டு வரும் இத்திட்டத்தில் வேளாண் பயிர்களான கரும்பு, தென்னை, தோட்டக்கலைப் பயிர்களான மஞ்சள், கொய்யா, மரவள்ளி உள்பட அனைத்து பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் அளிக்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் 50 சதம், மாநில அரசின் 25 சதம் என மொத்தம் 75 சத மானியம் வழங்கப்படுகிறது.

இதர விவசாயிகளுக்கு மத்திய அரசின் 40 சதம், மாநில அரசின் 25 சதம் என மொத்தம் 65 சத மானியம் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்ப் பாசனத்தில் செடிக்கு நேரடியாக தண்ணீர் விடப்படுகிறது. அதனால், 30 சதம் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. உரத்தை தண்ணீரில் கரைத்து சொட்டு நீர்ப்பாசனம் மூலம் செடிகளுக்கு கிடைப்பதால், உரம் வீணாவது குறைகிறது. தண்ணீர் செடிக்கு மட்டுமே செல்வதால், மற்ற இடங்களில் களைகள் முளைப்பது கட்டுப்படுத்தப்படுகிறது. சாகுபடி செலவு குறைகிறது. மகசூல் 20 சதம் வரை அதிகம் கிடைக்கிறது.

தமிழகத்தில் தற்போது உணவு உற்பத்தி, 100 லட்சம் டன்னாக இருக்கிறது. இந்தாண்டு, 115 லட்சம் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவு ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வரும் நிலையில், சொட்டு நீர்ப்பாசனம் முழு அளவில் செயல்படுத்தும்போது, 20 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி கூடுதலாக கிடைக்கும். மேலும், 30 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்படும். அதை வைத்து பாசன வசதி பெறும் நிலப்பரப்பை அதிகப்படுத்தவும் முடியும்.

**பிரண்டை செடியை சாகுபடி செய்ய வேளாண் துறை அதிகாரிகள் யோசனை**

First Published : 04 Jul 2011 02:07:39 PM IST

காரியாபட்டி, ஜூலை 3: காரியாபட்டி பகுதியில் மருத்துவ குணம் நிறைந்த பிரண்டை செடியை சாகுபடி செய்து, அதிக லாபம் பெறலாம் என வேளாண் துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது:

மூலிகை சாகுபடி செய்வோரை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. மூலிகை சாகுபடி செய்ய விரும்புவோர் பிரண்டை செடியை சாகுபடி

செய்து பயனடையலாம். பிரண்டை செடியில் கால்சியம், புரோட்டின், சி ஊட்டச்சத்து, நார்ச்சத்து, அமினோ அமிலங்கள் உள்ளன.

பிரண்டை ஆண்மைக் குறைவு, ஒழுங்கற்ற மாதவிடாய் கோளாறுகள், சோம்பல், பசியின்மை, ருசியின்மை, எலும்பு முறிவு, வாய்ப்புண், வாய்நாற்றம், அல்சர், மூலம், பொலிவற்ற சருமம், ஆஸ்துமா, நீரழிவு, கண்பார்வை கோளாறு, கண் எரிச்சல், உடல் பருமன் போன்ற நோய்களுக்கு நிவாரணம் தரும் அருமருந்தாக உள்ளது. பல்வேறு இயற்கை மருத்துவ தயாரிப்புகளில் பிரண்டை முக்கிய பங்கு வகிக்கிறது.

பிரண்டையின் வேர், தண்டு, இலை, பூ, காய் என அனைத்து பகுதிகளும் பல வகைகளில் பயன்படுகின்றன. பிரண்டையை ஒரு முறை சாகுபடி செய்து காபி, தேயிலை பயிர்களைப் போன்று பலமுறை அறுவடை செய்து அதிக லாபம் பெறலாம்.

பிரண்டையின் சாகுபடி நுட்பங்கள் மிகவும் எளிது. ஆடு, மாடுகள் உண்பதில்லை என்பதால் பிரண்டை செடிக்கு வேலி தேவையில்லை. மொட்டை மாடியிலும் இதனை சாகுபடி செய்யலாம். வாரக்கணக்கில் தண்ணீர் ஊற்றாவிட்டாலும் சாகாது. வறட்சியை தாக்குப்பிடிக்கும் தாவரமாகும். நீர் ஊற்றும்போது திரும்பவும் முளைக்க ஆரம்பிக்கும், பிரண்டையிலிருந்து மருந்து பொருட்கள் மட்டுமின்றி ஊறுகாய், ஜாம், ஜெல்லி போன்ற உணவு பண்டங்களையும் தயாரிக்கலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**உற்பத்தி குறைந்தது, தேவை அதிகரித்தது : சர்வதேச அளவில் தேயிலை விலை உயர வாய்ப்பு**

ஜூலை 05,2011,04:26



கொச்சி : சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் தேயிலைக்கான தேவை அதிகரித்துள்ளது. அதே சமயம், இதன் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், தேயிலை விலை வரும் மாதங்களில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் தேயிலை உற்பத்தியில், அசாம் மாநிலம் முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளது. சென்ற 2010ம் ஆண்டு, அசாமில் தேயிலை உற்பத்தி குறைந்தது.

இதனால், உள்நாட்டு தேயிலை உற்பத்தி 1.3 சதவீதம் குறைந்து 96.7 கோடி கிலோவாக சரிவடைந்தது. இது, கடந்த 2009ம் ஆண்டு 97.90 கோடி கிலோவாகவும், 2008ம் ஆண்டு 98 கோடி கிலோ என்ற அளவிலும் இருந்தது. தென்னிந்தியாவிலும் தேயிலை உற்பத்தி குறைந்து வருகிறது. இதனால் தேயிலை ஏற்றுமதியும் குறைந்துள்ளது.

சென்ற ஆண்டு, தேயிலை ஏற்றுமதியும் 2.4 சதவீதம் சரிவடைந்து 19.3 கோடி கிலோவாக குறைந்தது. இந்நிலையில், நடப்பு 2011ம் ஆண்டும், தேயிலை உற்பத்தி குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தேயிலைக்கான தேவை உயரும் என்பதால், அதன் விலை வரும் மாதங்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

நடப்பு ஆண்டு, ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான 4 மாதங்களில், நாட்டின் தேயிலை உற்பத்தி 16.20 கோடி கிலோ என்ற அளவில் உள்ளது. இது சென்ற ஆண்டு இதே காலத்தில் 16.30 கோடி கிலோவாக இருந்தது. இதே மாதங்களில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, 1.60 கோடி கிலோ குறைந்து, 6.60 கோடி கிலோவில் இருந்து 5.10 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. பருவநிலை மாற்றத்தால், தேயிலை உற்பத்தி சரிவடைந்துள்ளதாக இத்துறையை சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கென்யாவில் சென்ற ஆண்டு தேயிலை உற்பத்தி சிறப்பாக இருந்தது. ஆனால், இவ்வாண்டு இதன் உற்பத்தி குறைந்துள்ளது. கென்யாவில் 2 கோடி கிலோ தேயிலை பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டுடனான பணப் பரிவர்த்தனைப் பிரச்னை, மேற்காசிய நாடுகளில் அரசியல் ஸ்திரமற்ற நிலை ஆகியவற்றால், தேயிலை ஏற்றுமதி குறைந்துள்ளது.

எனினும், இந்நாடுகளில், விரைவில் தேயிலைக்கான தேவை அதிகரிக்கும் என்பதால், ஏற்றுமதி மடு பிடிக்கும். உள்நாட்டிலும் தேயிலை ஏல மையங்களின் வர்த்தகம் பெருகும் என்று தேயிலை வர்த்தகர்கள் நம்பிக்கைத் தெரிவித்தனர்.

தற்போதைய மதிப்பீட்டின்படி, வரும் மாதங்களில் தேயிலை ஏல மையங்களில், தேயிலை விலை 7-8 சதவீதம் வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னிந்தியாவில் ஆண்டுக்காண்டு தேயிலை உற்பத்தி சரிவடைந்து வருகிறது. சென்ற 2010ம் ஆண்டு, தேயிலை ஏல மையங்களில்,

சராசரியாக ஒரு கிலோ தேயிலை 103.55 ரூபாய்க்கு விலை போனது. 2009ம் ஆண்டு இதன் விலை 105.60 ரூபாயாகவும், 2008ம் ஆண்டு 86.99 ரூபாய் என்ற அளவிலும் இருந்தது.

நடப்பாண்டில், மார்ச் மாதம் வரையிலான மூன்று மாதங்களில், தேயிலை ஏல மையங்களில், தேயிலை விலை 16 சதவீதம் சரிவடைந்து, ஒரு கிலோ 90.72 ரூபாய்க்கு விலை போனது. சர்வதேச தேயிலை உற்பத்தியில், இந்தியாவின் பங்களிப்பு 23 சதவீதம் என்ற அளவில் உள்ளது. நாட்டின் பொருளாதாரம், கடந்த சில ஆண்டுகளாக 8-10 சதவீதம் என்ற அளவில் வேகமாக வளர்ச்சி கண்டு வருவதால், தேயிலைக்கான தேவை 5 - 6 சதவீதம் உயர வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கென்யாவின் தேயிலை உற்பத்தி குறைவு, இந்திய தேயிலையை இறக்குமதி செய்வதில் எகிப்து நாடு காட்டி வரும் ஆர்வம் போன்றவற்றால், நம் நாட்டின் தேயிலை ஏற்றுமதிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளதாக இத்துறையை சேர்ந்த ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

**ஆடி விதைப்புக்கு காஞ்சி மண் தயார்**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,01:39 IST

வாலாஜாபாத் : தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளதால், காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள், மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில நாட்களாக, தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. இதனால், சம்பா பட்டத்தில் நெல் மற்றும் மணிலா பயிரிடப்படும் விவசாயிகள், தங்களின் நிலங்களில் புழுதி ஓட்டி, நிலங்களை பக்குவப்படுத்தி வருகின்றனர். சாமந்திபுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஆறுமுகம் கூறியதாவது: எங்களது கிராமத்தில் விளை நிலங்கள் களிப்பான பூமி. தண்ணீர் குறைவானப் பகுதி என்பதால், இரண்டு பருவம் மட்டும் வேளாண்மை பயிர்களை பயிரிட்டு வருகிறோம். தற்போது,தென்மேற்கு பருவ மழை துவங்கியிருப்பதால் ஆடியில் விதை விதைக்க நிலங்களை புழுதி ஓட்டும் பணியை செய்கிறோம். பருவ மழை தீவிரம் அடைந்தால், சம்பா பட்டத்தில் நெல் விதைக்கலாம். கடந்த ஆண்டைபோல், இந்த ஆண்டு மழை பெய்தால், நெற்பயிரை சாகுபடி செய்வோம். குறைவாக மழை பெய்தால், மானாவாரி பயிர்களான மணிலா பயறு வகைகள் விதைக்க உள்ளோம் என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

## துவரை பயிரில் அதிக லாபம் பெறுவது எப்படி? வேளாண் ஆய்வாளர்கள் தரும் அசத்தல் "ஐடியா'

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,01:26 IST

வேப்பம்பட்டு : துவரை பயிரிடுவதில், நடவு முறையை பின்பற்றினால் விளைச்சல் அதிகரித்து கூடுதல் லாபம் பெறலாம் என, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை கூறியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் 8,000 எக்டேர் பரப்பளவுக்கு மேல் பயறு வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதில், துவரைப் பயிர் மட்டும் ஆண்டுக்கு 1,814 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. துவரை பெரும்பாலும் ஊடு பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை நேரடி விதைப்பாக சால்களில் விவசாயிகள் விதைக்கின்றனர். ஆனால், துவரையை நாற்று விட்டு நடவு செய்தால் அதிக விளைச்சல் பெறலாம் என, வேளாண் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.திருவள்ளூர் அடுத்த திருவூர் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தேவநாதன் மற்றும் உதவிப் பேராசிரியர் குமரபெருமாள் ஆகியோர் இதுகுறித்து கூறியதாவது: துவரை நடவு முறை சாகுபடிக்கு ஏக்கருக்கு ஒரு கிலோ பயன்படுத்தப்படுகிறது. ஒரு கிலோ விதையை கால்சியம் குளோரைடு (லிட்டருக்கு 20 கிராம்) கரைசலில் ஒரு மணி நேரம் ஊற வைத்து பின்பு, ஏழு மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர், தேவையான உயிர் உரங்கள் மற்றும் பூஞ்சாணத்துடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து 200 மைக்ரான் அளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்பி விதைக்க பயன்படுத்த வேண்டும். பைகளில் தண்ணீர் சேராமல் தவிர்க்க வேண்டும். நேர்த்தி செய்த விதையை பைக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஒரு செ.மீ., ஆழத்தில் விதைக்க வேண்டும். நாற்று நடுவதற்கு 15 நாட்கள் முன்பு குழிகளை மண், எரு கொண்டு நிரப்பி, குழிக்கு 1 செடி வீதம் நடவு செய்ய வேண்டும். தனிப்பயிர் சாகுபடிக்கு 15 சதுர செ.மீ., அளவுள்ள குழிகளை ஐந்துக்கு மூன்றடி இடைவெளியிலும், ஊடு பயிருக்கு ஆறுக்கு மூன்றடி இடைவெளியிலும் குழி எடுக்கலாம். உரம், பூச்சி மற்றும் நோய் தடுப்பு மேலாண்மை நடவடிக்கையை முறையாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். மேலும், பூ உதிராமல் தடுக்க பூக்கும் பருவத்தில், வளர்ச்சி ஊக்கிகளை செடிகளின் மீது தெளிக்க வேண்டும். நடவு செய்த 20 முதல் 30 நாட்கள் கழித்து 5 முதல் 6 செ.மீ., அளவுக்கு நுனிக்குருத்தை கிள்ளி விடுவதால் பக்கக் கிளைகள் அதிகரிக்கும். இதன் மூலம் துவரை விளைச்சல் அதிகரிக்கும். இவ்வாறு வேளாண் நிலைய பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

**பருத்தி மாசுபடும் தன்மையை குறைத்திட வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,00:10 IST

தூத்துக்குடி : பருத்தி மாசுபடும் தன்மையை குறைத்து தரத்தை மேம்படுத்துவது குறித்து வேளாண் அலுவலர் யோசனை தெரிவித்துள்ளார். நெல், வாழை, பருத்தி சாகுபடிகளில் பருத்தியும் முக்கிய பங்கு வகிக்கிறது. உணவுக்காக பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. பருத்தியானது உடைகள் தயாரிக்க பயன்படுகிறது. தரமான பருத்தியை முறையான வழிமுறைகளின்படி பராமரிப்பு செய்து வந்தால் பருத்தி மாசுபடும் தன்மையை குறைத்து தரத்தை மேம்படுத்தி அதிக வருவாய் ஈட்டி வாழ்வில் வளம் பெறலாம். பருத்தியின் தரம் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் பருத்தி மாசுபடும் தன்மையைக் குறைப்பதுடன் அதன் தரத்தினையும் மேம்படுத்திடலாம்.

பருத்தி செடியில் உள்ள காய்களில் குறைந்தது 50 சதவீதம் வெடித்த பின்புதான், பருத்தி அறுவடையை ஆரம்பிக்க வேண்டும். ஒரு வார இடைவெளியில் அறுவடை செய்யப்பட வேண்டும். முழுமையாக வெடித்து மலர்ந்த பருத்தியை மட்டும் அறுவடை செய்ய வேண்டும், காலை நேரத்தில் பனி இல்லாத நேரத்தில் மட்டும் பருத்தி அறுவடை செய்யப்பட வேண்டும். தலைமுடி பருத்தியில் சேராமல் இருக்க, பருத்தியை பறிப்பவர்கள் தங்கள் தலைமுடியை ஒரு துணியால் முழுவதும் மூடிக் கட்டிக் கொள்ள வேண்டும். செடியின் அடிப்பாகத்தில் இருந்து பருத்தியினை எடுக்கத் தொடங்க வேண்டும். தூய்மையைப் பேணுவதற்காக புழு, பூச்சி மற்றும் நோயினால் சேதமடைந்த பருத்தியை தனியாக ஒரு பையில் சேகரிக்க வேண்டும்.

மழையினால் நனைந்த பருத்தியை நன்கு உலர்ந்த பிறகே அறுவடை செய்ய வேண்டும். கொட்டுப் பருத்தி தனியாக எடுக்கப்பட்டு தனியாக சேமித்து வைக்கப்பட வேண்டும். கடைசியாக அறுவடை செய்யப்படும் பருத்தி தனியாக சேமிக்கப்பட வேண்டும். பருத்தி அறுவடைக்குப்பின் சேமிப்பதற்கு முன்பாக நிழலில் உலர்த்தப்பட வேண்டும். பருத்தி சேமிக்கும் இடம் சுத்தமானதாகவும், ஈரம் அற்றதாகவும் இருத்தல் வேண்டும். சிமெண்ட் தரை இல்லாவிட்டால், தரைப் பகுதியில் பருத்தி துணியைப் பரப்பி, பின் சேமிக்க வேண்டும். வீடுகளில் குவிக்கப்பட்டு இருக்கும் பருத்திக் குவியல்கள் பருத்தி துணியினால் மூடப்பட வேண்டும். பருத்தி சேகரிக்கப்படும் அறைகள் தூசி, அழுக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள் உட்புகா வண்ணம் இருக்கமாக மூடப்பட்டு இருத்தல் வேண்டும். பருத்தி சுமையினை ஏற்றுவதற்கு முன் கைவண்டி, டிராக்டர் மற்றும் டிராலி போன்றவைகள் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

பருத்தி சுமை ஏற்றப்பட்ட வண்டிகளை பருத்தி துணியைக் கொண்டு நன்றாக எல்லாப் பக்கங்களும் மூடிய பிறகு தான் ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு செய்தால் அதிக லாபம் பெறலாம் என தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**கரும்பு சாகுபடியில் நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,23:09 IST

தியாகதுருகம் : கூலியாட்கள் பிரச்னைக்கு தீர்வாக கரும்பு சாகுபடியில் நவீன இயந்திரங்களை பயன்படுத்துவது விவசாயிகளிடம் அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நம்பகமான விலை, பராமரிப்பு செலவு குறைவு என்பதாலும் அளவான தண்ணீர் பாய்ச்சினாலே நன்கு வளர்ந்து கூடுதல் லாபத்தை தருவதால் ஆண்டுதோறும் கரும்பு பயிரிடும் பரப்பு அதிகரித்து வருகிறது. நடவு, களை எடுப்பது, அறுவடை ஆகிய பணிகளுக்கு கூலியாட்கள் கிடைப்பதில் தட்டுபாடு உள்ளதே கரும்பு சாகுபடியில் இருக்கும் ஒரே பிரச்னையாக உள்ளது. இதற்கு தீர்வாக பல நவீன இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், இவைகள் இன்னும் அதிக அளவு புழக்கத்திற்கு வரவில்லை.

முக்கியமாக கரும்பு அறுவடை இயந்திரம் 1 கோடி ரூபாய் மதிப்புள்ளதாக உள்ளதால் இதனை வாங்க விவசாயிகள் பலரும் தயக்கம் காட்டி வருகின்றனர். இருப்பினும் கரும்பு சாகுபடிக்கு பயன்படும் மற்ற விலை குறைந்த இயந்திரங்களை விவசாயிகள் ஆர்வமுடன் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். அதே போல் சொட்டு நீர் பாசன முறையும் கரும்பு சாகுபடியில் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். கரும்பு பயிரில் "களை' எடுத்து அதன் வேர்பகுதியில் மண் அணைக்கும் இயந்திரங்களை விவசாயிகள் பலரும் பரவலாக பயன்படுத்த துவங்கியுள்ளனர். இவ்வகை இயந்திரங்களை பயன்படுத்த மீட்டர் பார் முறையில் கரும்பு நடவு செய்ய வேண்டும். ஒரு மணிநேரத்தில் ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள கரும்பில் களைகளை அகற்றி பார்களுக்கு மண் அணைத்து பணிகளை முடிக்க முடியும். இதனால் கூலியாட்களை நம்பி இருக்க வேண்டிய நிலை மாறி வருகிறது.

இந்த இயந்திரத்தை இயக்க ஒருவர் மட்டும் போதுமானதாக உள்ளது. இதன் விலை ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் ஆகும். கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்து வரும் நிலையில் நவீன இயந்திரங்களை நேரம் மற்றும் செலவு குறைவதோடு, அலைச்சல் மிச்சமாகி கூடுதல் லாபம் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் பலரும் கரும்பு சாகுபடியில் நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**நீர் பாசன சங்க உறுப்பினர்களுக்கு மானியத்தில் இடுப்பொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,23:09 IST

உளுந்தூர்பேட்டை : நீர் வள-நிலவளத்திட்டத்தில் நீர் பாசன சங்க உறுப்பினர்களுக்கு இடு பொருட்கள் வழங்க 4.48 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து திருநாவலூர் வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு : திருநாவலூர் வட்டத்திலுள்ள ஆத்தூர், ஆதனூர், களமருதூர், டி.ஒரத்தூர், பா.கிள்ளனூர், உ.செல்லூர், பாண்டூர், அரளி, செம்மனங்கூர், நகர், செங்குறிச்சி, பாதூர், மதியனூர், பு.மாம்பாக்கம், மட்டிகை, சேந்தநாடு, மணலூர், களத்தூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த நீர் பாசன சங்க உறுப்பினர்களுக்கு மானிய விலையில் இடு பொருட்கள் வழங்கப்படுகிறது. இதற்காக 4.48 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் பயனடைய உதவி வேளாண் அலுவலர்கள் ஜெயகாந்தி-8122130822, செல்வகுமார்- 9488787799, ராஜன் 9788964341, சபாபதி-8870109466, பன்னீர்செல்வம்-9442232179 ஆகிய மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**மானிய விலையில் நெல் விதைகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,23:07 IST

விழுப்புரம் : விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை மையத்தில் நெல், உளுந்து விதைகள் அரசு மானியத்துடன் வழங்கப்படுகிறது. இது குறித்து விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை மைய உதவி இயக்குனர் (பொ) தமிழ்வேல் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விக்கிரவாண்டி வட்டாரத்தில் தற்போது தென்மேற்கு பருவ மழை சீராக பெய்வதால் விதைப்பு பணி நடக்கிறது. விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற தரமான நெல் ரகங்கள் ஏடிடி37, ஏடிடி39, வெள்ளை பொன்னி, உளுந்து வம்பன் 3 மற்றும் 4 ரக விதைகளை விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை மையம் மற்றும் எண்ணாயிரம் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் விற்பனைக்கு உள்ளன. ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் நெல் விதைகளுக்கு 5 ரூபாயும், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உளுந்து விதைகளுக்கு 12 ரூபாயும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் வாங்கி பயன் பெறலாம்.

**பெல்லாரி விதை விற்பனை : விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,23:11 IST

திண்டுக்கல் : பெல்லாரி வெங்காய விதை பற்றாக்குறையை போக்க விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். மாவட்டத்தில் பெல்லாரி வெங்காய சாகுபடி செய்ய பழநி, ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால், தேவையான விதைகள் மாவட்டத்தில் தனியாரிடம் கூட கிடைப்பதில்லை. விவசாயிகள் ஈரோடு, கோயம்புத்தூருக்கு விதை வாங்க செல்கின்றனர். அங்கும் அலைக்கழிக்கப்பட்டு விதை பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க தோட்டக்கலைத்துறையே தரமான விதைகளை விற்பனை செய்ய முன்வர வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## *கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 4.5 சதவீதம் சரிவு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*கடந்த மே மாதத்தில், நாட்டில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 4.5 சதவீதம் சரிவடைந்து 15.30 கோடி டாலரிலிருந்து (ரூ.688.50 கோடி) 14.60 கோடி டாலராக (ரூ.657 கோடி) குறைந்துள்ளது.*
*ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தேவைப்பாடு குறைந்ததே இதற்கு காரணமாகும். நாட்டில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் ஐரோப்பா மற்றும் ஜப்பான ஆகிய நாடுகளின் பங்களிப்பு முறையே 26 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக உள்ளது. அமெரிக்காவின் பங்களிப்பு 17 சதவீதமாக உள்ளது.*
*ஒரு சில ஐரோப்பிய நாடுகள் கடன் சுமையில் சிக்கி தவிப்பதால், ஐரோப்பிய நாடுகளில் கடல் உணவு பொருள்கள் விற்பனை குறைந்துள்ளது என்று கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. ஜப்பானில் பூகம்பம் மற்றும் சுனாமி ஏற்பட்டதால், அந்நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்கள் குறைந்துள்ளன என்று கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனம் ஒன்றின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*
*நடப்பு நிதி ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் (ஏப்ரல் – மே), கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 4.3 சதவீதம் சரிவடைந்து 31.60 கோடி டாலராக குறைந்துள்ளது.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,820-2,870

### மணிலா பயறு

80 கிலோ கொண்ட மூட்டை
4,300-4,350

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,350-00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,550-00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,887-00

### நல்லெண்ணெய்

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புலிகேஸரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500-00
டின் (15கிலோ) 1,700-00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,800.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,555.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி)
535-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூலை.4-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துவபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அமரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

### மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூலை.2-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8155
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,180
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,131
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,248
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 18,272
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 18,559

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூலை.4-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் (கிலோவுக்கு) | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 32-00 | காலிப்பிளவர் | ரூ. | 30-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 16-18 | பொறியல் தட்டை | ரூ. | 16-18 |
| வெண்டைக்காய் | ரூ. | 16-20 | தேங்காய் | ரூ. | 12-15 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12-10 | பட்டாணி | ரூ. | 100-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 9-12 | பூண்டு | ரூ. | 90-00 |
| புடலை | ரூ. | 16-20 | கறிவேப்பிலை | ரூ. | 12-10 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18-20 | அகத்தி | ரூ. | 16-00 |
| சுரைக்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| பாகற்காய் | ரூ. | 18-16 | குடைமிளகாய் | ரூ. | 32-00 |
| கொத்தவரை | ரூ. | 14-15 | சாதா பீன்ஸ் | ரூ. | 18-20 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 48-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-7 | கறிபீன்ஸ் | ரூ. | 24 |
| மேராக்காய் | ரூ. | 18-20 | புஸ்பீன்ஸ் | ரூ. | 26-22 |
| பச்சை மிளகாய் | ரூ. | 32-34 | காளான் | ரூ. | 80-150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 30-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 26-30 | மாங்காய் | ரூ. | 8-10 |
| பெரியவெங்காயம் | ரூ. | 14-00 | திராட்சை | ரூ. | 40-00 |
| இஞ்சி | ரூ. | 25-34 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18-16 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-26 | கொய்யா1கிலோ | ரூ. | 32-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 24-22 | மாதுளை1கிலோ | ரூ. | 80-45 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 14-13 |
| கருணைகிழங்கு | ரூ. | 30-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | சாத்துக்குடி | ரூ. | 32-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-24 | நெல்லிக்காய் | ரூ. | 36-22 |
| முள்ளங்கி | ரூ. | 16-18 | ஆரஞ்சு | ரூ. | 70-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24-22 | வெள்ளரி | ரூ. | 20-26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10-18 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| நூல்கோல் | ரூ. | 24-20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-30 |
| கொத்தமல்லி | ரூ. | 30-22 | அவரை | ரூ. | 18-20 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 24-20 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 3-00 |
| கவர்கோஸ் | ரூ. | 15-00 | தர்பூசணி | ரூ. | 14-00 |
| புதினா | ரூ. | 16-00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 24500 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 10,600 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9800 |
| கொப்பரை நாடன் | ரூ. 6125 |
| கொப்பரை ராசு | ரூ. 6025 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6275 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7850 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7800 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20700 |
| ரப்பர் பால் | ரூ. 15000 |
| காப்பி | ரூ. 11200 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 1260 |
| நேந்திரகாய் | ரூ. 2200 |
| இஞ்சி | ரூ. 1100 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூலை.4-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 72.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,350 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 57.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,020 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,020 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.196.00 | அதிகபட்சவிலை | ரூ.275.00 |
| சராசரி விலை | ரூ.167.21 | சராசரி விலை | ரூ.256.38 |
| குறைந்தபட்சவிலை | ரூ.146.00 | குறைந்தபட்சவிலை | ரூ.210.00 |

பட்டு நூல் ரூ.1,764

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,280.00 | 16,280.00 | 16,280.00 |
| ஒரு கிராம் | 2,035.00 | 2,035.00 | 2,035.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 51,175.00 | 54,450.00 | 54,500.00 |
| ஒரு கிராம் | 54.45 | 54.45 | 54.50 |

தினகரன்

## சர்க்கரை விலை உயராது 5 லட்சம் டன் ஏற்றுமதி

பதிவு செய்த நாள் 7/5/2011 2:24:25



புதுடெல்லி: இந்த ஆண்டில் அதிக உற்பத்தி காரணமாக ஏற்றுமதியால் உள்நாட்டில் சர்க்கரை சில்லறை விற்பனை விலை உயர வாய்ப்பில்லை என்று இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி சங்கத்தின் இயக்குனர் ஜெனரல் அவினாஷ் வர்மா கூறுகையில், இந்த ஆண்டில் கரும்பு உற்பத்தி அபரிமிதமாக உள்ளதால் உள்நாட்டு தேவையில் தன்னிறைவுக்கு பிறகு 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு கடந்த மாதம் மத்திய அரசு அனுமதி அளித்தது. இந்த ஏற்றுமதியால் உள்நாட்டில் சர்க்கரை சில்லறை விற்பனை விலை உயர வாய்ப்பில்லை. கடந்த சில வாரங்களில் நாட்டின் பெருநகரங்களில் சர்க்கரை விலை கிலோ ஸீ1 குறைந்துள்ளது.

டெல்லி, கொல்கத்தாவில் ஸீ32, மும்பையில் ஸீ31 ஆக இருக்கும் சர்க்கரை விலை, சென்னை, பெங்களூருவில் கிலோ ஸீ28 ஆக உள்ளது என்றார்.